புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# வேளாண் வேதம் உணர்த்தும் பண்பாடு

வெ.மணிகண்டன்
உதவிப் பேராசிரியர்
தமிழாய்வுத் துறை
நேரு நினைவுக் கல்லூரி புத்தனாம்பட்டி.

*ஆய்வுச் சுருக்கம்:*

*மனித சமூகத்திற்குத் தேவையான அடிப்படை உண்மைகளை வாழ்வியல் சிந்தனைகளை உபதேசிக்கும் நீதி நூல்களுள் ஒன்று வேளாண் வேதன் என்று சிறப்பிக்கப் பெறும் நாலடியார் ஆகும்.சமண முனிவர்களுள் பலரால் இயற்றப்பட்டது.ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி,நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி என்பதற்கேற்ப,சிறப்பாக அமைய பெற்றுள்ளது. வேளாண் வேதம் உணர்த்தும் பண்பாடு என்ற தலைப்பில்(பொருண்மையில்) முன்னுரை,பண்பாட்டின் விளக்கம், ஈகையின் சிறப்பினையும்,கல்வியின் மகத்துவத்தையும், தீவினையச்சம், மெய்ம்மை, குடிப்பிறப்பு, மேன்மக்கள், முடிவுரை, அடிக்குறிப்புகள் என இக்கட்டுரையானது ஆராயும் நோக்கில் அமையப் பெற்றுள்ளது.*

*முன்னுரை:*

*சங்க இலக்கியங்கள் எனப்படும் பதினெண் கீழ்கணக்கு நூல்களுள் திருக்குறளுக்கு அடுத்த பெருமையுடைய நூல் வேளாண் வேதம்(நாலடியார்) இதன் வேறு பெயர்கள் 'வேளாண் வேதம்' 'நாலடி நானூறு' எனவும் அழைப்பர்.நானூறு பாடல்களை கொண்ட நூல்.அறத்துப் பால்,பொருட்பால்,காமத்துப்பால் என மூன்று பால்களும் ஒவ்வொர் இயலிலும் பல தலைப்புகளும்(அதிகாரங்களும்) ஒவ்வோர் தலைப்பிலும் பத்துப்பத்துப் பாடல்களாக அமையப்பெற்றுள்ளது.வேளாண் வேதம் உணர்த்தும் பண்பாடு என்ற பொருண்மையில் இக்கட்டுரையானது அமைக்கப்பட்டுள்ளது.*

*பண்பாடு: மனிதனை விலங்கினின்று வேறுபடுத்துவது பண்பாடாகும்.*

*"பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்"1*

*என்னும் கலித்தொகை பாடலடி பண்புக்கு உதாரணமாக அமைந்துள்ளது.*

*பண் என்னும் சொல்லுக்குப் பொதுவாக இசை,உருவாக்குதல்,செய்தல் முதலான பொருள்கள் அமைந்துள்ளன.*

*"பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்*
*கண்ணோட்டம் இலாத கண்"2*

*என்ற குறளில் இடம்பெறும் பண் என்ற சொல்லிற்கு பாடலில் உள்ள இசைவு என்பது பொருள்.பண்பாடென்பது பரம்பரையான நல்ல குடித் தன்மையாலும்,பிறரிடம் வேறுபாடு காணாத நல்ல ஒழுக்கத்தாலும் பொருந்த அமைவதாகும்.*

*ஈகை: அறத்துப்பாலில்,இல்லறவியல் உணர்த்தும் பண்பில் சிறந்தது கொடுத்தலே என்பதை,*

*"இல்லா இடத்தும் இயைந்த அளவினால்*
*உள்ள இடம்போல் பெரிதுவந்து- மெல்லக்*
*கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்கு*
*அடையாவாம் ஆண்டைக் கதவு" 3*

*என்ற பாடலடியில் சமணமுனிவர் கூறுவதாவது,வசதி இல்லா விடத்தும்,தம்மால் இயன்ற அளவு வசதியுள்ள இடம் போல் மிகவும் மகிழ்ந்து இருந்து,அமைதியாய்க் கொடை புரியும் பண்பு*

கொண்ட மாந்தர்க்கு மறுமையில் அதாவது வீடுபேற்றுக் கதவுகள் அடைக்கப்படாது திறந்திருக்கும் என்பதை அறியலாம்.ஆக நாம் கொஞ்சத்திலே மகிழ்ந்து அதிலே பிறருக்கு கொடுக்கும் பண்பிருந்தால் அதை விட சிறந்த பண்பு ஏதுமில்லை என்பதை உணரலாம்.மேலும் வறியவர்க்கு ஒன்று ஈவதே ஈகை என்ற ஈகையின் சிறப்பை உணர்ந்த வள்ளுவர் தம் குறளில்,

"அற்றார் ஆழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி." 4

என்ற குறள் வழி உணர்த்துவது எதுவுமே இல்லாத ஏழையரின் கொடிய பசி நோயைப் போக்க வேண்டும்.அது தான் பொருள் பெற்றவன் தன் பொருளைச் சேமித்து வைக்கும் இடமுமாகும்.

.................................. வறுமையால்
"ஈதல் இசையாதெனினும் இரவாமை
ஈதல் இரட்டி யுறும்" 5

என்ற பாடலடிகள் மூலம் நாலடியார் வழி அறிவது,ஏழ்மையால் ஈதல் இயலாது போயினும்,இன்னொருவரிடம் இரவாதிருத்தல்(பொருள் கேட்டு பெறாமலிருத்தல்)ஈதலினும் இருமடங்கு சிறந்ததாகும் என்பதை அறியலாம்.

கல்வி (பெண்ணிற்கு அழகு):

மனிதனுக்கு அழகு என்பது ஆண்,பெண் இருவருக்குமே அதிலும் அழகு என்கிற அணிகலனுக்கு பாத்திரமாய் இருப்பவள் என்று சொன்னாள் பெண் மட்டுமே இந்த சிறப்பிற்குரியவள்.ஆனால் நாலடியார் கூறும் கருத்தாவது பெண்ணிற்கு அழகு கல்வியே என்கிறார்.இதனை,

"கல்வி கரையில கற்பவர் நாள் சில
மெல்ல நினைக்கின் பிணிபல – தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து" 6

இப்பாடல் வரிகள் மூலம் கல்வி என்பது முடிவில்லாதன.கற்பவருடைய வாழ்நாட்களோ சில அதாவது பொறுமையாய் நினைத்து பார்த்தால் நம் வாழ் நாட்களில் வியாதிகளே(பிணிகள்) பலவாக இருக்கின்றன.ஆதலால் நீரை நீக்கி பாலைப் பருகும் அன்னப் பறவையைப் போல அறிவுடையவர், நூலின் தன்மைகளை அறிந்து நல்ல நூற்களையே கற்கும் அழகை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.இன்றைய காலக்கட்டத்தில் பாமர மக்களும் கல்வியின் அருமை பெருமைகளை அறிந்து பயன் பெற்று வருகின்றனர். ஆக கல்விக்கு வயதில்லை என்பதும்,சாகும் வரைக்கும் கற்கலாம் அது வாழ்க்கையில் மென்மேலும் வளரவும் உதவுகிறது.மேலும் கல்வியின் சிறப்பினை வள்ளுவர் தனது குறளில்,

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை" 7

எனவே, கல்வி வாழ்வில் அறிவை வளர்த்துக் கொள்வதற்கும்,கற்பவரை நல்வழிப்படுத்துவதற்கும் பெரிதும் இன்றியமையாததாக உள்ளது.அக்காலத்தில் கல்வி கற்றவருக்கு பெருமதிப்பும் இருந்துள்ளதையும் அறிய முடிகிறது.

தீவினையச்சம்:

"பெரியவர் கேண்மை பிறை போல நாளும்
வரிசை வரிசையா நந்தும் – வரிசையால்
வானூர் மதியம் போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு" 8

என்ற பாடலடியில் தீச்செயல் செய்வதற்கு நாம் அஞ்சுதல் வேண்டும் என்பதை,பெரியோரின் நட்பானது,நல்லவர்களின் தோழமையானது பிறை நிலாப் போல நாள் தோறும் படிப்படியாய்த் தானாகவே தேய்ந்து குறையும். தம் உறவினர்களுக்கும்,நண்பர்களுக்கும்,தீமையான செயல்களை செய்யாது உண்மையாய் நடந்த அக்கால மக்களின் பண்பு போல இன்றைய மக்களும் அடுத்தவர்களுக்கு தீமை செய்யாத பண்பினை அறிய முடிகிறது.

மெய்ம்மை:

குற்றமற்ற இவ்வுலகில் நிலைப்பெற்றவை மூன்று.அவை அறம்,பொருள்,இன்பமாகும்.இமூன்றனுள் நடுவிலுள்ள பொருளை ஒருவன் அடைந்தால் இருபக்கமும் உள்ள அறத்தையும்,இன்பத்தையும் கூட அடைவான்.ஆக இவ்வுலகில் எந்த வேலையைச் செய்தாலும், உண்மையுடன் இருந்து செயல்பட்டால் அது நல்ல விதத்தில் பயனை தருவிக்கும்.இல்லையேல் துன்பத்தையே அடைவான் என்பதை,

“வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருத்தலையும் எய்தும்;
நடுவண தெய்தாதான் எய்தும் உலைப்பெய்து
அடுவது போலும் துயர்” 9

என்ற பாடல் வரிகள் மூலம் நாலடியார் உணர்த்துகின்றது.

குடிபிறப்பு: பிறந்த குடியின் பெருமையைப் பற்றி,

“சான்றாண்மை,சாயல்,ஒழுக்கம் இவை மூன்றும்
வான்தோய் குடிப்பிறந்தார்க் கல்லது – வான் தோயும்
மைதவழ் வெற்ப! படாஅ பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு” 10

என்ற பாடலடியில் நற்குடியில் பிறந்ததன் பயனாய் நாம் தெரிவது மாண்பும்,பழகும் விதமும்(பதமும்),நல்லொழுக்கம் இம்மூன்றும் அமைவது சிறப்பாகும்.ஆனால் தாழ்குடியினருக்கு பெருஞ்செல்வம் பெற்ற போதும் அமையாது என்பதை அறியலாம்.நாம் சிரமப்பட்டு வேலை செய்து,நேர்மையாயிருந்து சம்பாதித்தாலும் (பொருள் ஈட்டினாலும்) உயர் குடியில் பிறந்திருக்கிறோம் என்றெல்லாம் புகழ்ந்தாலும் இம்மூன்று குணங்கள் இலையெனில் இவ்வுலகில் வாழ்வதில் பயனில்லை எனலாம்.

மேன்மக்கள்:

சமுதாயத்தில் வாழும் மக்களிடம் இருக்க வேண்டிய ஒன்று நல்ல அறிவுடையோர்,நல்ல செயல்,நல்ல குனமுடையார் என்பதை ,

“கள்ளார்; கள் உண்ணார்;கடிவ கடிந்தொரீஇ
எள்ளிப் பிறரை இகழ்ந்துரியார்;தள்ளியும்
வாயிற் பொய் கூறார்;வடுவறு காட்சியார்
சாயின் பரிவ திலர்” 11

என்பதை சமண முனிவர் உரைப்பது யாதெனில்,குற்றமற்ற நல்லறிவினை உடையவர் களவு செய்யமாட்டார்.உடலுக்கு கள்ளைக் குடியார்,நம் வாழ்வின் நலத்திற்கு விலக்க வேண்டியவற்றை விலக்கி நீக்கிடுவார்.பிறரை மட்டப்படுத்தி இகழ்ந்து பேசாதார்,தவறியும் வாயால் பொய் பேசாமலிருப்பார்.தன் வாழ்வே சரிந்தால் கூட துன்புற மாட்டார்கள்.ஏனெனில் கடவுளின் அருளும் அவர்கள் அடுத்தவர்க்கு செய்யும் நற்பயனுமே காரணமாகும் என்பதை அறியலாம்.

முடிவுரை:

பண்பாட்டின் ஒரு கூறு அறமாகும்.அறம் செய்தால் சமூகப் பண்பாட்டின் தரம் உயரும்,நம் வாழ்க்கையும் புகழ் பெறும்.நாம் இவ்வுலகில் இருக்கும் வரை முடிந்தளவு அறம் செய்து வாழ்தல் சிறப்பு. பிறர் துன்பங்கண்டு களைய முற்பட வேண்டும்.இருபாலருக்கும் கல்வியே அழகாகும்.ஆக மற்ற விருப்பங்களுக்கெல்லாம் தடை விதித்து கல்வியைப் பெற விருப்பம் கொள்ள வேண்டும்.நாம் இவ்வுலகில் இருக்கும் வரைக்கும் அனைத்து தரத்து மக்களுக்கும் தீமை செய்யாமல் வாழ வேண்டும்.உண்மையுடன் வாழ கற்றுக் கொள்வோம்.எப்பொழுதும் மேன் மக்களாயிருந்து பலருக்கும் நன்மை செய்து வாழ கற்று கொண்டால், தனி மனித வாழ்வும்,சமுதாய வாழ்வும் நலமாய் அமையும் என்ற சிந்தனையை ‘வேளாண் வேதம்’ பாடல்கள் உணர்த்துவதாய் இக்கட்டுரையானது நிறைவுறுகிறது.

அடிக்குறிப்புகள்:-

1. கலித்தொகை, பா.எண் -133
2. திருக்குறள் -573

3. *நாலடியார் நயவுரை,புலவர் சுந்தர சண்முகனார்,பா.எண்-21, ப.எண்-18*
4. *திருக்குறள் - 226*
5. *நாலடியார் நயவுரை,புலவர் சுந்தர சண்முகனார், பா.எண்-25, ப.எண்- 18*
6. *நாலடியார் நயவுரை,புலவர் சுந்தர சண்முகனார் பா.எண்-135, ப.எண்-62*
7. *திருக்குறள் - 400*
8. *நாலடியார் நயவுரை,புலவர் சுந்தர சண்முகனார் பா.எண்- 55, ப.எண்-30*
9. *நாலடியார் நயவுரை,புலவர் சுந்தர சண்முகனார் பா.எண்-44, ப.எண்-26*

10. *நாலடியார் நயவுரை,புலவர் சுந்தர சண்முகனார் பா.எண்-142, ப.எண்-66*
11. *நாலடியார் நயவுரை,புலவர் சுந்தர சண்முகனார் பா.எண்-157, ப.எண்-72*

********* ********* ********** ********* ********* ********** ********** **********